**கலேவல பிரதேச சபை - 2022**

---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலோவல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலேவல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூ ற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள் மற்றும் நிர்மாணங்களின் மொத்தம் ரூபா 4,843,868 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | அடுத்த கணக்காண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சீராக்குவதாக | சொத்துக்கள் மூலதனமாக்கப் பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,679,804 ஆன மீன் விற்பனை நிலையமொன்றுடனான கட்டிடமொன்று பௌதீக ரீதியாக காணப்படாத போதும் அப்பெறுமதி கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதி அண்மித்து அறிக்கையின் பிரகாரம் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 35,855,237 ஆன இணக்கமின்மை என்று அவதானிக்கப்பட்டது | குறித்த பயன்பாட்டு ஆவணங்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

### 1.6.3 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 1,414,529 ஆன 03 பெறவேண்டிய மீதிகளை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அச்த அங்கீகாரத்தை மிகைத்து ரூபா 231,024 அன மீதியொன்று பதிலழிக்கப்பட்டு இருந்தது. | கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 5,171,070 ஆன முற்பண மீதி யொன்றுக்குரிய அட்டவணைகள், பதிவேடுகள், சமர்ப்பிக்கப்படாமையால் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,080,579 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,061,616 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,016,000 | 2,212,151 | 2,332,582 | 1,310,477 | 1,962,000 | 2,055,590 | 1,926,510 | 1,430,907 |
| (ii) | வாடகை | 7,340,000 | 5,376,143 | 7,129,468 | 128,103 | 6,540,000 | 6,336,233 | 5,808,140 | 1,881,429 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 4,450,000 | 4,431,625 | 4,350,626 | 772,370 | 4,500,000 | 4,095,609 | 4,095,609 | 691,370 |
| (iv) | ஏனைய வருமானம் | 20,000,000 | 14,396,750 | 12,900,000 | 4,298,250 | 30,000,000 | 4,189,000 | 1,387,500 | 2,801,500 |
| (v) | முத்திரைக் கட்டணங்கள் | 20,000,000 | 32,690,034 | 32,808,792 | 6,937,672 | 30,000,000 | 7,618,430 | 563,000 | 7,055,430 |
| (vi) | ஏனைய வருமானம | 25,127,000 | 8,159,691 | 7,578,909 | 740,812 | 25,037,000 | 4,904,583 | 4,904,583 | 160,029 |
| | | 78,933,000 | 67,266,394 | 67,100,377 | 14,187,684 | 98,039,000 | 29,199,445 | 18,685,342 | 14,020,665 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் போது வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடொன்றை கோரி கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்ட போதும் 2021.02.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கௌரவ ஆளுனர் அவர்களின் கட்டளையின் பேரில் மதிப்பீடு தற்காலிகமாக நிடைநிறுத்தப்பட்டதாக | மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 89,667 ஆன 81 GI குழாய்களின் பற்றாக்குறை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலேவல பிரதேச சபைக்குரிய 25 காணிகள் மற்றும் 59 மயானங்களின் உரித்தினை சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டின் பின்னர் கிடைத்திருந்த உழவு இயந்திரத்தின் உரித்தையும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | - காணி கையேற்பு நடவடிக்கைகளில் பல நிறுவனங்கள் தொடர்புபட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடாக இதனை விரைவில் மேற்கொள்ள முடியாதென | உரித்தினைக் கையேற்க வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலேவல பிரதேச சபையின் பலநோக்கு கட்டிடத்திற்காக சூரிய வலு முறைமை ஒன்றை பொருத்துவதற்கு மத்திய மாகாண சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை கோரப்பட்டு ரூபா 5,495,000 ஆன குறைந்த விலையில் சமர்ப்பித்த கம்பெனிக்கு ஒப்பந்தம் 2022 மார்ச் 14 ஆம் தேதி வழங்கப்பட்டு இருந்த போதும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உடன்படிக்கை செய்யப்படாமல் 2022 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அளவில் இணங்கப்பட்ட விலை விட ரூபா 1,802,000 ஆல் அதிகரித்து ரூபா 7,297,000 தொகைக்கு மீண்டும் அக்கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்த காரணத்தினால் சபை நிதியத்திற்கு ரூபா 1,802,000 ஆனநட்டமொன்று இடம்பெற்று இருந்தது. | நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை பொது போக்குவரத்து சேவைகள் சிக்கல்கள் நிலைமை காரணமாக ஒப்பந்தக்காரருக்கு அலுவலகத்திற்கு வருகை தர முடியாத காரணத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் உடன்படிக்கை செய்ய நேர்ந்ததாக | குறைந்த கிரயத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் 02 பதவிகளுக்குரிய 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இரண்டாம் தர வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன ஆரம்ப மட்டத்தின் ஆட்சேர்ப்பு முகாமைத்துவ சேவைகள் சேவை சுற்றறிக்கை 2020/02 இன் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியாதுள்ளது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | 01 ஆண்டு முதல் 43 ஆண்டுகளுக்குரிய ரூபா 731,479 கூட்டுத்தொகையான 17 ஊழியர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |